## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. EA.No. 1/2022 in EP No.9/2021

Prosecution witness for P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.மரிய இருதயம் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதியம்புத்தூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பானை வந்தது. 12.07.2017 தேதியிட்ட செல்வகுமார் என்பவர் கொடுத்த புகார் சம்பந்தமான மனு எண்.151/2017 சம்பந்தப்பட்ட கோப்பு கொண்டு வந்துள்ளேன். மேற்படி செல்வகுமார் இந்த மனுவின் மனுதாரர். புகாரில் மனுதாரர் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தன் வீட்டை பொறுத்து இந்த மனுவில் மனுதாரருக்கு ரூ.21,62,000/-க்கு கிரைய ஒப்பந்தம் போட்டு 3ம் எதிர்மனுதாரர் கிரையம் எழுதித்தர மறுப்பதாக சொல்லியுள்ளார். அதுகுறித்து விசாரணை நடந்தது. அதில் 3ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் வாங்கிய மேற்படி தொகையில் 10 நாள்களில் ரூ.3 லட்சம் திருப்பி கொடுப்பதாகவும் பாக்கி தொகையை மீண்டும் ஒரு 10 நாளில் திருப்பி கொடுப்பதாகவும் வாக்குமூலம் எழுதி கொடுத்துள்ளார். என்னிடம் காட்டடப்படும் ஆவணம் மனுதாரர் கொடுத்த புகார், அவர் கொடுத்த வாக்குமூலம், 3ம் எதிர்மனுதாரரின் மகன் ரஞ்சித்குமார் கொடுத்த வாக்குமூலம் புகார் மனு ரசீது மற்றும் அந்த மனுவில் நிலையத்தில் எடுக்கப்பட்ட முடிவு ஆகியவற்றின் சான்றிடப்பட்ட

நகல்களின் தொகுப்பு என்றால் சரிதான். அது ம.சா.ஆ.22.

**குறுக்கு விசாரணை–**

நான் கடந்த 1 1/2 ஆண்டுகளாக உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். முதல் விசாரணை சங்கதிகள் எனக்கு ஆவணத்தின் அடிப்படையில் தான் தெரியும். ம.சா.ஆ–22ல் உள்ள புகாரில் 3ம் எதிர்மனுதாரர் சொத்தை ஸ்ரீராம் நிதிநிறுவனத்தில் அடமானம் வைத்திருப்பதாக மனுதாரர் சொல்லவில்லை. மேற்படி நிதிநிறுவனம் தான் 1ம் எதிர்மனுதாரர். 1ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை. மனுதாரர் 3ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தார். ஆனால் 3ம் எதிர்மனுதாரரின் மகன் ரஞ்சித்குமார் தான் வாக்குமூலம் எழுதிகொடுத்தார். 3ம் எதிர்மனுதாரர் 10 நாள்களில் 3லட்சத்தை கொடுப்பதாகவும் மீதமுள்ள தொகையை மேலும் 10 நாள்களில் திருப்பிக் கொடுப்பதாகவும் சொன்னதாக எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கோப்பின் அடிப்படையில் சொல்கிறேன். விசாரணை நடந்த தேதியில் நான் மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இல்லை. கோப்பிலும் 3ம் எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜரானதாக எந்த குறிப்பும் இல்லை. பிறகு எதனடிப்படையில் 3ம் எதிர்மனுதாரர் ஆஜரானதாக சொல்கிறேன் என்றால் விசாரித்து தெரிந்து கொண்டேன். நிலைய எழுத்தரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். நிலைய எழுத்தர் 2017ல் புகார் கொடுத்த தேதியில் இருந்து இன்று வரை அதே நிலையத்தில் பணியில் இருந்து வருகிறாரா என்றால் இல்லை. பிறகு எப்படி அவர் சொன்னார் என்றால் அவர் வேறு ஒருவரிடம் விசாரித்து சொன்னார். நிலைய எழுத்தர் யாரிடம் விசாரித்தார் என்று எனக்கு தெரியாது. புகாரில் 1ம் எதிர்மனுதாரரிடம் 3ம் எதிர்மனுதாரர் சொத்தை அடமானம் வைத்திருந்தால் 1ம் எதிர்மனுதாரரையும் அழைத்து விசாரித்திருப்போம்

என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரின் மகன் ரஞ்சித்குமார் தனது வாக்குமூலத்தில் 3ம் எதிர்மனுதாரர் சொத்தை 1ம் எதிர்மனுதாரரிடம் அடமானம் வைத்திருப்பதாகவும் சொல்லவில்லை. 1 மாதத்தில் மொத்த தொகையும் திருப்பி கொடுப்பதாக ரஞ்சித்குமார் வாக்குமூலம் எழுதிக்கொடுத்ததால் விசாரணையை முடித்துவிட்டோம் என்றால் சரிதான். 1 மாதத்திற்குள் 3ம் எதிர்மனுதாரர் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்று மனுதாரர் மீண்டும் புகார் கொடுக்கவில்லை.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.08.07 17:09:37 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தூத்துக்குடி.